# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 12.04.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா அந்நிஸாவின் 59வது வசனத்தை ஓதினார்கள்:**

إِنَّ اللّٰهَ يَأْمُرُكُمْ أَنْ تُؤَدُّوا الْأَمٰنٰتِ إِلٰى أَهْلِهَا ۙ وَإِذَا حَكَمْتُمْ
بَيْنَ النَّاسِ أَنْ تَحْكُمُوْا بِالْعَدْلِ ۚ إِنَّ اللّٰهَ نِعِمَّا يَعِظُكُمْ بِهٖ ۗ
إِنَّ اللّٰهَ كَانَ سَمِيْعًا بَصِيْرًا

*பொருள்: நீங்கள் அமானத்துகளை (நம்பி ஒப்படைப்பவற்றை) அவற்றிற்குத் தகுதியானவர்களிடமே ஒப்படைக்க வேண்டுமென்றும், நீங்கள் மக்களுக்கிடையில் தீர்ப்பு வழங்கும் போது நீதியுடன் தீர்ப்பு வழங்க வேண்டுமென்றும், நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு கட்டளையிடுகின்றான். அல்லாஹ் உங்களுக்கு அறிவுரை கூறுகின்றது எதுவோ, நிச்சயமாக அதுவே மிகவும் சிறந்தது. நிச்சயமாக அல்லாஹ் நன்கு கேட்பவனும் பார்ப்பவனுமாவான். (3:59)*

ஜமாஅத்திலுள்ள அனைவரும் அறிந்திருப்பது போன்று இவ்வருடம் ஜமாஅத்தில் தேர்தல்கள் நடைபெறும் வருடமாகும். மூன்று வருடங்களுக்கு ஒருமுறை தேர்தல்கள் நடைபெறும். இதில் அமீர்கள், தலைவர்கள் மேலும் பல உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். சில ஜமாஅத்துகளில் இந்த தேர்தல்கள் தொடங்கி விட்டன. பெரிய ஜமாஅத்துகளில் தேர்தல் மஜ்லிஸ்கள் தேர்ந்தெடுக்கப்படும். இந்த தேர்தல் மஜ்லிஸ் தனது பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும்.

இவ்வாறு ஜமாஅத்தின் அமைப்பை சரியான முறையில் செயல்படுத்துவதற்காக தேர்தல்கள் அவசியப்படும் அதே வேளையில், இந்தப் பணியைச் சிறந்த முறையில் தொடர்ந்து செய்வதற்கு, பொறுப்புகளின் உரிமையைச் செலுத்துவதற்குச் சரியான நபர்களைத் தேடுந்தெடுப்பதும் அவசியமாகும். இது எந்த அளவு முக்கியமான பணி என்றால், அல்லாஹ் இந்தப் பணியைப் பற்றி திருக்குர்ஆனில் மூஃமின்களுக்கு கவனமூட்டியிருக்கின்றான். மேலும் எப்படிப்பட்ட பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என விளக்கமாகக் கூறியிருக்கின்றான். மேலும் பொறுப்பாளர்களுக்கு பொறுப்பைப் பெறுவது மட்டும் போதுமானதல்ல. அதற்கான உரிமையை நிலைநாட்ட வேண்டுமெனவும் கவனமூட்டி இருக்கின்றான். அவ்வாறு உரிமையைச் செலுத்தாத நிலையில் அல்லாஹ்வின் கோபத்தைப் பெறக்கூடியவர்கள் ஆவீர்கள் எனவும் கூறியுள்ளான்.

நான் ஓதிய வசனத்தில் இதனைப் பற்றி விளக்கப்பட்டுள்ளது. இந்த வசனத்தில், முதல் பொறுப்பு ஓட்டு போடக்கூடியவர்களுக்குரியதாகும் என கூறப்பட்டுள்ளது. பதவி ஓர் அமானத் ஆகும். எனவே உங்களது பார்வையில் சிறந்த மனிதருக்கு உங்களுடைய ஓட்டுகளைப் பயன்படுத்துங்கள். ஓட்டுப் போடுவதற்கு முன்பாக, நாம் யாருக்கு ஓட்டுப் போடுகின்றோமோ அல்லது ஓட்டுப்போட விரும்புகின்றோமோ அவர் இந்த பொறுப்பிற்குத் தகுதியானவரா? இல்லையா? என ஆராய வேண்டும். மேலும் ஒருவருக்கு எந்த அளவு பெரிய பதவிக்குரிய பொறுப்பை வழங்குவதற்கு காலத்தின் கலீஃபாவிற்கு ஆலோசனை வழங்குவதற்காக நீங்கள் ஒன்றுகூடியிருக்கின்றீர்களோ அதே அளவு சிந்தனை செய்வதும், துஆ செய்வதும் அவசியமாகும். இந்த மனிதர் எனக்கு விருப்பமானவர் ஆவார். இவருக்கு நான் ஓட்டுப் போடுகின்றேன் என்றோ? அவர் எனது அன்பிற்குரியவர் ஆவார் என்றோ அவர் எனது சகோதரர் என்பதாலோ, அவர் சேக் ஆவார்; அவர் சவுத்ரி ஆவார்; பட்டான் ஆவார்; ராஜ்பூத் ஆவார் என்பதாலோ அவருக்கு ஓட்டுப் போடுகின்றேன் என்று இருக்கக் கூடாது. எந்த விதமான பாகுபாடும் பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் குறுக்கிடக் கூடாது. நீங்கள் ஏன் சரியாகப் பணியாற்றவில்லை என்று அல்லாஹ் பொறுப்பாளர்களிடம் மட்டும் விசாரணை செய்யமாட்டான்.

மாறாக ஓட்டுப் போடக்கூடியவர்களும் விசாரிக்கப்படுவார்கள். நீங்கள் உங்களுடைய ஓட்டுரிமையை ஏன் சரியாகப் பயன்படுத்தவில்லை? என்றும் கேட்பான்.

அல்லாஹ் இவ்வசனத்தின் இறுதியில், إِنَّ اللّٰهَ كَانَ سَمِيْعًا بَصِيْرًا *அல்லாஹ் நன்கு கேட்பவனும், நன்கு பார்ப்பவனும் ஆவான்* என்று கூறியுள்ளான். இது ஓட்டுப் போடக் கூடியவர்களுக்கும் ஆகும். அதாவது உங்களுக்கு ஒருவரைப் பற்றி சரியாக தெரியவில்லையென்றால் பிறகு அல்லாஹ்விடம், இறைவா! உனது பார்வையில் யார் சிறந்தவராக இருக்கின்றாரோ அவருக்கு ஓட்டுப் போடுவதற்கு எனக்கு வாய்ப்பினை வழங்குவாயாக! என்று துஆ செய்ய வேண்டும். நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அந்த துஆவை நன்கு கேட்பவனும் நன்கு பார்ப்பவனுமாக இருக்கின்ற இறைவன் அதை ஏற்றுக் கொள்வான். அவன் பார்ப்பவன் ஆவான். அவன் உங்களுடைய செயல்களை ஆழ்ந்து கவனிக்கின்றான். இறைவனை ஏமாற்ற முடியாது. அவன் உள்ளத்தின் ஆழம் வரை நன்கு அறியக்கூடியவன் ஆவான்.

எனவே, மூஃமின்களின் ஜமாஅத் இறைவனிடம் துஆ செய்தவாறு பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் போது, அல்லாஹ் மூஃமின்களுக்கு உதவி புரியக்கூடியவனாக ஆகி விடுகின்றான். ஒவ்வொரு செயலைச் செய்யும் போது துஆ செய்வதும், துஆவுடன் வேலையைத் தொடங்குவதும் நமது ஜமாஅத்தின் வழிமுறையாகும். தேர்தலுக்கு முன்பும் துஆ செய்யப்படுகிறது. தூய மனதுடன் இறைவனிடம் வழிகாட்டலை வேண்டியவாறு தேர்தலை நடத்தினால், பிறகு அல்லாஹ் தனது அருள்களையும், பரக்கத்துகளையும் வழங்குகிறான்.

எனவே, ஓட்டு போடக்கூடிய ஒவ்வொருவரும் தனது ஓட்டுரிமையின் முக்கியத்துவத்தை உணர வேண்டும். எல்லா விதமான சுய சிந்தனையையும், சுய விருப்பத்தையும், தொடர்பையும் விட்டு விட்டு எந்தப் பணிக்காக ஒருவரை தேர்வு செய்ய விரும்புகின்றீர்களோ அவருக்கு ஓட்டுப் போட வேண்டும். பழைய அஹ்மதிகள் அனைவரும் அறிவார்கள். புதிய அஹ்மதிகளிடமும், இளைஞர்களிடமும் இது தெளிவுபெற வேண்டும். அதாவது தேர்தலில் ஓட்டு போடப்படுகிறது. இறுதி முடிவை காலத்தின் கலீஃபா தான் எடுக்கிறார்கள். சில சமயங்களில் ஒருவருக்கு பெரும்பான்மையான ஓட்டுகள் இருந்தும், சில காரணங்களின் அடிப்படையில் வேறொருவர் நியமிக்கப்படுகின்றார். மேலும் சில சமயங்களில் உள்ளூர் பொறுப்பாளர்களின் தேர்தல் முடிவின் ஒப்புதலை நாட்டின் அமீர் வழங்குகிறார் என்றால், அதற்கு சட்டம் அனுமதிக்கின்றது என்பதும், பெரும்பான்மையாக பெறப்பட்ட ஓட்டினை நிராகரிக்க அவருக்கு உரிமை உண்டு என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆனால் அமீர்கள் பொதுவாக பெரும்பான்மை ஓட்டிற்கு கண்ணியம் அளிக்க வேண்டும். குறிப்பாக இங்கிலாந்து, ஐரோப்பாவின் நாடுகளும், அமெரிக்கா, கனடா மற்றும் ஆஸ்திரேலியாவின் நாடுகளும் இந்த விசயத்தைப் பதிவு செய்து கொள்ளுங்கள். அதாவது உள்ளூர் தேர்தல்களில் தேசிய அமீர் விரும்பினால் பெரும்பான்மைக்கு மாற்றமான முடிவினை கொண்டு வருவதற்கும் வழிமுறைகளில் அனுமதியுள்ளது. ஆனால் நான் எந்தெந்த நாடுகளின் பெயர்களைக் கூறினேனோ அவர்கள் இந்த வருட தேர்தலின் முடிவில் ஏதாவது மாற்றம் செய்ய வேண்டும் என்றால் அதற்கு முன்பாக என்னிடம் கேட்க வேண்டும். இங்கிருந்து முதலில் அனுமதி பெற வேண்டும். அமீர்கள் சுயமாக மாற்றம் செய்ய வேண்டாம். இதனைத் தவிர பாகிஸ்தான், இந்தியா போன்ற பிற நாடுகளில் சட்டத்திற்கேற்ப ஒப்புதல் வழங்கலாம். ஒவ்வொரு நாட்டின் தேசிய ஆமிலாவுக்கும் வேறு சில பொறுப்பாளர்களுக்கும் தலைமையகம் அதாவது காலத்தின் கலீஃபாவிடமிருந்து ஒப்புதல் பெறப்படுகிறது.

இந்த வசனத்தில், تُؤَدُّوا الْاَمٰنٰتِ اِلٰٓى اَهْلِهَا *நீங்கள் அமானத்துகளை அவற்றிற்குத் தகுதியானவர்களிடமே ஒப்படைக்க வேண்டும்* என்று கூறப்பட்டுள்ளது. இது பொறுப்பாளர்களுக்கும் பொருந்தும். சில பொறுப்புகள் அல்லது சில பணிகள் தேர்தலின்றி நியமன அடிப்படையில் ஒப்படைக்கப்படுகின்றது. உதாரணமாக, Ristha Natha Sec. – திருமண சம்பந்தமான செயலரின் பொறுப்பு அல்லது தொண்டு ஆகும். மேலும் சில பொறுப்புகள், சில வேலைகள் கொடுக்கப்படுகின்றன. ஜமாஅத் அமீர், ஜமாஅத் சதர் அல்லது சம்பந்தப்பட்ட செயலர் ஒருவருக்கு இதுபோன்ற பணிகளைக் கொடுத்தால் சுய விருப்பம் மற்றும் தொடர்பின் காரணமாக கொடுக்காதீர்கள். மாறாக ஜமாஅத் உறுப்பினர்களை விரிவாக ஆராய வேண்டும். பிறகு இவ்வாறு ஆராய்ந்த பிறகு

அவர்களில் சிறந்தவராக தென்படக் கூடியவர்களிடம் பணியை ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு செய்யவில்லையென்றால் இது பாரபட்சம் காட்டுவது ஆகும். இஸ்லாத்தில் அது வெறுக்கப்பட்டதாகும்.

ஆனால் ஒருவர் தனது நண்பர் அல்லது அன்பருக்கு ஒரு பணியைக் கொடுக்கின்றார் என்றால், மேலும் அவர் அதற்கு தகுதியானவர் என்றால், ஆட்சேபனை செய்யும் பழக்கம் உள்ள சிலர், இவர் தனக்கு நெருக்கமானவருக்கு அந்தப் பொறுப்பைக் கொடுத்து விட்டார் என தேவையில்லாமல் ஆட்சேபனை செய்கின்றார்கள். அவ்வாறு அவர்கள் ஒருபோதும் ஆட்சேபனை செய்யக் கூடாது. ஒரு பொறுப்பாளர் அமீரின் நெருங்கியவராக அல்லது சொந்தக்காரராக இருப்பது அவரை தொண்டாற்றுவதிலிருந்து தடுத்து வைக்கும் அளவிற்கு பாவம் ஒன்றும் கிடையாது. நான் இந்த விசயத்தை, சில மக்களிடமிருந்து இதுபோன்ற ஆட்சேபனைகள் வருவதினால் தெளிவுபடுத்தினேன்.

அடுத்து அல்லாஹ் இவ்வசனத்தில் பொறுப்பாளர்களிடம் கூறுகின்றான்: تَحْكُمُوْا بِالْعَدْلِ *நீதியுடன் உங்களது பொறுப்புகளை, நிர்ணயிக்கப்பட்ட பணிகளைச் செய்யுங்கள்.* நீதி, நேர்மை இல்லையென்றால் பாரபட்சமாக செயல்பட்டால், நெருங்கியவர்களுக்கு முக்கியத்துவம் அளித்தால், ஒரு பணியாளரிடம் அதிக அளவு விசாரணையும், மற்றவரிடம் கண்டும் காணாமல் இருக்கும் நிலை இருந்தால் நீதியை நிலைநாட்ட முடியாது. நீதி நிலைபெறவில்லையென்றால், பிறகு பணியில் அருள்கள் கிடைக்கப் பெறாது. நல்ல விளைவுகளுக்குப் பதிலாக தீய விளைவுகள் ஏற்படும். பணியாற்றுபவர்களிடம் மட்டும் இந்த நிலை இருக்கக் கூடாது என்பதல்ல. மாறாக ஜமாஅத் உறுப்பினர்களுடனும் நீதியுடன் நடந்து கொள்ள வேண்டும். அதற்கேற்பவே தீர்ப்புகள் இருக்க வேண்டும்.

இவர் இன்னாருடைய நண்பர் ஆவார். இன்னாருடைய அன்பர் ஆவார். இன்னக் குடும்பத்தைச் சேர்ந்தவராவார். எனவே அவரிடம் ஒருவிதமாகவும், மற்றவரிடம் வேறு விதமாகவும் நடக்கக் கூடாது. இப்படிப்பட்ட விசயங்கள் இருந்தால் அவை ஜமாஅத்தில் நிம்மதியற்ற நிலையை ஏற்படுத்தி விடுகின்றன. இதனைப் போன்று காலத்தின் கலீஃபாவின் புறமிருந்து ரிப்போர்ட் கேட்கப்பட்டால் அந்த ரிப்போர்ட் சரியாக இருக்க வேண்டும். *நீதியுடன் உங்களது பொறுப்புகளை நிறைவேற்றுங்கள்* என்று கட்டளையிடப்பட்டுள்ளது. ஆனால் காலத்தின் கலீஃபாவுக்கு தவறான ரிப்போர்ட் அனுப்பப்பட்டால் பிறகு காலத்தின் கலீஃபாவிடமிருந்து தவறான தீர்ப்பு வழங்கப்பட்டு விடும். தவறான தீர்ப்பினை வழங்கச் செய்து அவர்கள், தான் குற்றவாளி ஆவதுடன் பிறரையும் குற்றவாளி ஆக்கும் குற்றத்திற்கு ஆளாகின்றனர்.

எனவே எப்போதும் ஜமாஅத் பணிகளில் இவ்விசயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பணியையும், கொடுக்கக்கூடிய ஒவ்வொரு தொண்டையும் அதிக அளவு சிந்தித்து நம்பிக்கையுடன் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். எனவே பதவி என்பது பெருமை கிடையாது. மாறாக அது மாபெரும் பொறுப்பாகும். துஆவுடன் பொறுப்புகளைச் செய்வது அவசியமாகும். அல்லாஹ் தன்னை நன்கு கேட்பவன் என்று கூறுகின்றான். அவன் உங்களது துஆக்களைக் கேட்கின்றான். குறிப்பாக இறைவனது கட்டளையின்படி முழுமையாக செயல்படுவதற்காக துஆக்கள் செய்யும் போது அல்லாஹ்வின் உதவி கண்டிப்பாக கிடைக்கிறது.

அல்லாஹ் ஓட்டு போடக்கூடியவர்களின் மீது பார்வையை வைப்பது போன்று, பொறுப்பாளர் மீதும் அவனது ஆழமான பார்வை இருக்கின்றது. நீங்கள் உங்களது பொறுப்புகளைச் செய்யவில்லை என்றால் நீதியுடனும், நேர்மையுடனும் தீர்ப்புகள் வழங்கவில்லை என்றால், பணிகளை அதற்குரிய உரிமைகளைச் செலுத்தியவாறு செய்யவில்லை என்றால் அனைத்தையும் பார்க்கக்கூடிய இறைவன், நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள் என்று கூறுகிறான். உங்களிடம் கேள்வி கேட்கப்படும். எனவே பொறுப்புகள் சுமத்தப்பட்டவர்களுக்கு இது மிகவும் அச்சப்பட வேண்டிய இடமாகும்.

மக்களுக்கு பதவிக்கான ஆசை மிக அதிகமாக இருக்கிறது. அவர்களுக்கு இது எவ்வளவு பெரிய பொறுப்பு என்பது தெரிய வந்தால், அதன் உரிமையைச் செலுத்தாமல் போனால் அவனது கோபமும், அவனது தண்டனையும் கிடைக்கும் என்பதைப் புரிந்து கொள்வார்கள். எனவே ஒவ்வொரு பொறுப்பாளரும் எல்லாரையும் விட அதிகமாக இரவு பகலாக பாவமன்னிப்பு வேண்டுபவராக இருக்க வேண்டும். ஒவ்வொரு பொறுப்பாளரும் ஓட்டுகளைப் பெற்ற பின்னர் அல்லது பொறுப்பிற்கான ஒப்புதல் வந்த பின்னர் அவர் சுதந்திரம் ஆகிவிடவில்லை.

மாறாக அவர் எப்படிப்பட்ட பிணைப்பில் வந்துள்ளார் என்றால், அதனை நிறைவேற்ற முடியாத நிலையில் தனது தகுதிக்கேற்ப சரியாக செயல்படாத நிலையில் அல்லாஹ்வின் வெறுப்பை பெறக்கூடியவராகி விடுவார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு பொறுப்பாளரும் ஜமாஅத் உறுப்பினர் ஒவ்வொருவரின் உரிமையையும் செலுத்த வேண்டும். அத்துடன் ஜமாஅத்தின் உரிமையையும் செலுத்த வேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு பொறுப்பாளரும், தன்னை நான் ஒரு ஜமாஅத் பொறுப்பாளர் ஆவேன். எனவே ஒவ்வொரு பலவீனமும் ஜமாஅத்தைப் பாதிக்கும் அல்லது ஜமாஅத்தின் பெயரைக் கெடுக்கக்கூடியதாக ஆகி விட முடியும். எனவே இந்த உரிமைகளைச் செலுத்தக் கூடியவராக ஆக வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பிறகு தமது முன்மாதிரியை நிலைநாட்டியவாறு மார்க்க உரிமைகளைச் செலுத்திக் கொண்டே உலக உரிமைகளை செலுத்துவதற்கான முன்னுதாரணத்தையும் நிலைநாட்ட வேண்டும். இது சொந்த விசயமாகும். நான் என்ன வேண்டுமென்றாலும் செய்வேன் என்று யாரும் கூறிவிட முடியாது. ஜமாஅத்துடன் எனக்கு எந்த தொடர்பும் இல்லை. நான் சுதந்திரம் ஆனவன். எனவே நான் விரும்புவதைத் தான் செய்வேன் என்று யாரும் கூறி விட முடியாது.

ஒவ்வொரு பொறுப்பாளரும் அவரது ஒவ்வொரு செயலும் இனி ஜமாஅத் விசயத்திற்கு உட்பட்டு தான் அமைந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த சிந்தனையை ஒவ்வொரு பொறுப்பாளரும் தனக்குள் ஏற்படுத்த வேண்டும். இப்படிப்பட்ட சிந்தனையுள்ள மனிதர்களை, ஓட்டுப்போடக் கூடியவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். வேறு வகையில் கூறுவதாக இருந்தால் இறையச்சத்தின் தரம் உயர்ந்துள்ளவர்களை பொறுப்பாளர்களாக ஆக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இந்தக் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்ட பிறகு நமது தக்வாவின் தரத்தை உயர்த்துவோம் என்பது நமது வாதமாகும். மேலும் தம் மீது சுமத்தப்பட்ட பொறுப்புகளை மற்றவர்களை விட அதிக உரிமைகளைச் செலுத்துவோம் என்பது நமது வாதமாகும். பிறகு மிகுந்த கவனத்துடன் ஜமாஅத் பொறுப்புகளை செலுத்துவது நமது கடமையாகும்.

அல்லாஹ் وَالَّذِيْنَ هُمْ لِاَمٰنٰتِهِمْ وَعَهْدِهِمْ رٰعُوْنَ *தங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருள்களையும், தம் உடன்படிக்கைகளையும் பேணிக் காப்பார்கள் (23:9)* என்று கூறுகின்றான்.

ஒவ்வொருவரும் இந்தக் கட்டளையைத் தமது வட்டத்தினுள் கண்முன் வைப்பது அவசியமாகும். மேலோட்டமாக தம்மீது சுமத்தப்பட்ட பொறுப்புகளை செயல்படுத்தக் கூடாது. மாறாக ஆழம் வரை சென்று அனைத்து நுட்பங்களையும் கண்முன் வைத்து தனது பணியைச் செய்ய வேண்டும். தேர்ந்தெடுக்கக்கூடியவர்களும், தமது பணியில் கவனத்துடன் இருப்பவர்களையே தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் தனது பொறுப்புகளை தனது அனைத்து விதமான ஆற்றல்களுடன் செய்ய முயற்சி செய்ய வேண்டும். உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் அளிப்போம் என்று செய்த உடன்படிக்கையை எல்லாரையும் விட அதிகமாக பொறுப்பாளர்கள் கடைபிடிக்க வேண்டும். அவர் எந்த தரத்தை உடைய பொறுப்பாளராக இருந்தாலும் சரியே!

பதவி வகிப்பது அல்லது தொண்டாற்றுவதற்கான விருப்பம் பலருக்கும் இருக்கிறது. பதவி வகிப்பதற்கான ஆசை இருக்கவே கூடாது. இது இஸ்லாமிய போதனைக்கு மாற்றமானதாகும். தொண்டாற்றுவதற்கான விருப்பம் இருக்கிறதென்றால் பிறகு ஏதாவது தொண்டு கொடுக்கப்பட்டால் அல்லது ஏதாவது பொறுப்பு கொடுக்கப்பட்டால், தொண்டாற்றக் கூடியவர்களும் பொறுப்பாளர்களும் இந்த அனைத்து விதமான உடன்படிக்கைகளையும் பூர்த்தி செய்யாமல் அவை நிறைவடையாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். உடன்படிக்கை எவ்வாறு நிறைவேறும்? எந்த தரத்தில் அது நிறைவேறும்.

இதற்கு எப்படிப்பட்ட தரம் வேண்டும் என்பதைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

وَالَّذِيْنَ هُمْ لِاَمٰنٰتِهِمْ وَعَهْدِهِمْ رٰعُوْنَ

*தங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருள்களையும், தம் உடன்படிக்கைகளையும் பேணிக் காப்பார்கள்* என்ற வசனத்தில் இறைவன் கூறுகின்றான். அவர்கள் தம்மிடத்தில் நஃப்ஸே அம்மாரா

உடைய ஆசைகளிலிருந்து மீண்டு வந்த அதன் உணர்வுகளின் மாபெரும் வெற்றி கிடைத்து விட்டது என்பது மட்டும் அவர்களது திறமையாக இருக்காது. மாறாக அவர்கள் முடிந்த வரை இறைவன் மற்றும் அவனது படைப்பினங்களின் அனைத்து அமானிதங்களுடைய அனைத்து உடன்படிக்கை உடைய ஒவ்வொரு பகுதியையும் கவனத்தில் கொண்டு இறையச்சத்தின் நுண்ணிய பாதையில் செல்வதற்கு முயற்சி செய்வார்கள். சக்தியுள்ள வரை அந்த வழியில் செல்வார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த வசனத்தில் ராஊன் என்ற சொல்லின் பொருள், பேணிப் பாதுகாக்கக் கூடியவர் என்பதாகும். இந்த சொல் அரபு மரபின்படி ஒரு மனிதர் தனது ஆற்றல் மற்றும் சக்திக்கேற்ப ஒரு செயலின் நுண்ணிய பாதைகளைக் கடந்து செல்லும் போதும், அதன் அனைத்து நுண்ணிய விசயங்களைச் செய்ய முயலும் போதும் எந்தப் பகுதியையும் விட விரும்பாத போதும் பயன்படுத்தப்படுகின்றது. எனவே இந்த வசனத்தின் பொருள் அந்த நம்பிக்கையாளர் தான் தன்னிடமுள்ள ஆற்றலுக்கேற்ப இறையச்சத்தின் நுண்ணிய பாதைகளில் செல்பவர்களாவர். அமானத்துகள் உடன்படிக்கை தொடர்பாகவுள்ள இறையச்சத்தின் எந்தவொரு பகுதியையும் விட விரும்பமாட்டார்கள். அனைத்தையும் பேணிப் பாதுகாப்பது அவர்களது குறிக்கோளாக இருக்கிறது. மேலோட்டமாக தன்னை அமீன் என்றும் உடன்படிக்கையை நிறைவேற்றுவதில் உண்மையாளர் என்றும் கூறுவதில் அவர்கள் மகிழ்ச்சி அடையமாட்டார்கள். அறியாமல் ஏதாவது துரோகம் ஏற்பட்டு விடக்கூடாது என்று அச்சப்பட்டுக் கொண்டேயிருப்பார்கள். மறைமுகமாக எவ்வித குறைபாடும் பலவீனமும் இருந்துவிடக் கூடாது என்று சக்திக்கேற்ப அனைத்து விசயங்களிலும் கவனத்துடன் சிந்தித்துக் கொண்டே இருப்பார்கள். இதனை வேறு வார்த்தையில் இறையச்சம் என்று கூறுவர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்தக் கருத்தின் சுருக்கம் என்னவென்றால் தனது விவகாரத்தில் அது இறைவனுடமோ, படைப்பினங்களுடனோ தொடர்புடைய விவகாரத்திலும் அந்த மூஃமின் சுதந்திரமான மற்றும் கட்டுபாடற்றவர் அல்ல. மாறாக இறைவனது பார்வையில் எந்த விதமான ஆட்சேபனைக்கும் ஆளாகி விடக்கூடாது என அச்சப்பட்டுக் கொண்டிருப்பர். தம்மிடமுள்ள அமானத்துகளையும், தாம் செய்த உடன்படிக்கைகளையும் கவனத்துடன் பேணி வருவர். எப்போதும் தம்மிடமுள்ள அமானத்துகளையும் தமது உடன்படிக்கைகளயைும் கண்காணித்து வருவர். இறையச்சம் என்ற தொலைநோக்கியுடன் அதன் அந்தரங்க நிலையை கவனித்து வருவர். அவர்களிடம் உள்ள அமானத்துகளும் அவர்களது உடன்படிக்கைகளிலும் மறைவாக எவ்வித குறைபாடும் வந்து விடக்கூடாது என நினைப்பார்கள்.

அவர்களிடம் உள்ள இறைவனது அமானத்துகளை அதாவது அனைத்து ஆற்றல்களையும், அனைத்து உறுப்புகளையும், உயிர், பொருள், கண்ணியம் ஆகியவற்றை இறையச்சத்தைப் பின்பற்றியவாறு அதற்கேற்ற இடங்களில் உபயோகப்படுத்துவார்கள். ஈமான் கொள்ளும் போது இறைவனுடன் செய்த உடன்படிக்கையை முழுமையான சத்தியத்துடன் நிறைவேற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள்.

இதனைப்போன்று அவர்களிடம் உள்ள படைப்பினங்களின் அமானத்துகளை மேலும் அமானத்தின் கட்டளையின் கீழுள்ள பொருள்கள் அனைத்திலும் சக்தியுள்ள வரை அவர்கள் தக்வாவின்படி செயல்படுவார்கள். அதில் ஏதாவது முரண்பாடு ஏற்பட்டால் தக்வாவை முன் நிறுத்தி முடிவு எடுப்பார்கள். அந்த முடிவினால் அவர்களுக்கு இழப்பு ஏற்பட்டாலும் சரியே!

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதனுடைய ஆன்மீகத்தின் அனைத்து அழகும், தக்வாவின் அனைத்து நுட்பமான வழிகளிலும் செல்வதில் உள்ளது. தக்வாவின் நுட்பமான வழிகள், ஆன்மீக அழகின் நுண்ணிய வரைபடமும், அழகிய வடிவமும் ஆகும். இறைவனது அமானத்துகளையும் நம்பிக்கையின் உடன்படிக்கையையும் முடிந்த வரை பேணி பாதுகாப்பது, தலை முதல் பாதம் வரை ஆற்றல் மற்றும் உறுப்புகளில் உள்ள வெளிப்படையான

கண்கள், காதுகள், கைகள், கால்கள் போன்றவையும் உட்புறமாக உள்ளம் போன்ற ஆற்றல்களும், ஒழுக்கங்களும் இவைகளுக்கு எந்த அளவு ஆற்றல்கள் உள்ளனவோ அவற்றை காலத்திற்கேற்ப உபயோகப்படுத்துவது, அனுமதிக்கப்படாத செயல்களிலிருந்து தடுப்பது, மறைவான தாக்குதல்களிலிருந்து கவனமாக இருப்பது, இதனுடன் அடியார்களுக்குரிய உரிமைகளைச் செலுத்துவது போன்றவை மனிதனின் ஆன்மீகத்தில் அனைத்து அழகுடன் தொடர்புடையவற்றைப் பெறுவதற்குரிய வழியாகும்.

இறைவன் திருக்குர்ஆனில் தக்வாவுக்கு லிபாஸ் – ஆடை என்று பெயர் சூட்டியுள்ளான். லிபாஸுத் தக்வா திருக்குர்ஆனின் சொல் ஆகும். இது ஆன்மீக அழகு, ஆன்மீக பொலிவு தக்வாவில் இருந்து தான் பிறக்கிறது என்பதை தெரிவிக்கிறது. தக்வா என்பது மனிதன் இறைவனது அனைத்து அமானத்துகளையும், ஈமானின் உடன்படிக்கைகளையும் மேலும் படைப்பினங்களின் அனைத்து அமானத்துகளையும் உடன்படிக்கைகளையும் முடிந்த வரை பேணி பாதுகாக்க வேண்டும். அதாவது அதன் நுண்ணிய பகுதிகளையும் கண்காணித்து அதன்படி முடிந்த வரை செயல்பட வேண்டும்.

எனவே தக்வாவின் தரம் உயராத வரை அமானத்துகள் உடன்படிக்கைகள் ஆகியவற்றின் உரிமைகளை நிறைவேற்ற முடியாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று, இறைவனுக்குரிய அமானத்துகளும் உள்ளன. அடியார்களுக்குரிய அமானத்துகளும் உள்ளன. ஒரு பொறுப்பாளர் குறிப்பாக இரு விதமான அமானத்துகளுக்கும் அமீன் என கருதப்படுவார். பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடிய ஜமாஅத் உறுப்பினர்களுக்கு மீண்டும் நான் கவனமூட்டுகின்றேன். அல்லாஹ்விடம் துஆ செய்தவாறு, இரண்டு விதமான அமானத்துகளையும் உடன்படிக்கைகளையும் நிறைவேற்றக் கூடியவர்களுக்கு ஓட்டுப் போடுங்கள்.

ஜமாஅத்தின் தக்வா எல்லா வகையிலும் உயர்ந்திருக்கும் போது தான் இது நடைபெறும். ஓட்டு போடக்கூடிய ஒவ்வொருவருடைய தக்வாவின் தரம் உயர்ந்திருக்கும் போது தான் இந்த நிலைமை ஏற்படும். எனவே ஜமாஅத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தன்னை ஆராய்ந்தவாறு தனது தரத்தை உயர்த்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

நான் கூறியது போன்று பொறுப்பாளர்களை ஜமாஅத் நபர்கள் தான் தேர்ந்தெடுப்பார்கள். ஜமாஅத் நபர்களிலிருந்து தான் பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். எனவே மூஃமின் என்ற நிலையில் நம் அனைவரிடமும் இருக்க வேண்டிய சிறப்பம்சங்களை குறிப்பாக பொறுப்பாளர்களிடம் இருக்க வேண்டிய சிறப்பம்சங்களை நான் கூறி விடுகின்றேன். உடன்படிக்கையைப் பேணுவதைப் பற்றி நான் முதலில் கவனமூட்டுகின்றேன்.

ஜமாஅத்தில் உடன்படிக்கையைப் பேணுவதன் தரம் உயரும் போது தான் பொறுப்பாளர்களின் உடன்படிக்கையைப் பேணும் தரமும் உயரும். அடியார்களின் உரிமைகளைச் செலுத்துவதிலுள்ள குறைபடுகளுள் வாக்குறுதிகளை நிறைவேற்றாமை ஒன்றாகும். அதாவது வாக்குறுதிகளை நிறைவேற்றாத காரணத்தால் உரிமைகள் செலுத்தப்படுவதில்லை. இதற்காக கடினத்தை மேற்கொள்ள நேரிட்டாலும் மேற்கொள்ள வேண்டும். இதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். மேலும் அடியார்களின் உரிமைகளைக் கொடுப்பதற்கு சரியான முயற்சி செய்ய வேண்டும்.

பல்வேறு வியாபார ஒப்பந்தங்கள் செய்யப்படுகின்றன. ஆட்சேபனை செய்யக் கூடியவர்கள் மற்றவர் மீது உடனே ஆட்சேபனை செய்து விடுகின்றனர். இதன் மூலம் சமூகத்தில் குழப்ப நிலை உருவாகி விடுகிறது. இஸ்லாம் அமைதியினை விரும்பக்கூடிய ஒரு மார்க்கமாகும். அமைதியினை விரும்பக்கூடிய மதம் ஆகும். எந்த அளவு இதன் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளதோ அதே அளவு முஸ்லிம்களில் உடன்படிக்கையை மீறுவது, குழப்பம் போன்றவை தென்படுகின்றது. மேலும் சமூகத்தில் வாழ்வதன் காரணமாக அஹ்மதிகளாகிய நம் மீதும் இதன் தாக்கம் ஏற்படுகின்றது. உடன்படிக்கை என்பது வியாபார விசயத்தில் செய்யப்படும் ஒப்பந்தம்

மட்டும் அல்ல. மாறாக எல்லா இடங்களிலும் உடன்படிக்கை உள்ளது. கணவன் – மனைவி திருமண பந்தம் இருக்கிறது. இதுவும் ஓர் உடன்படிக்கை ஆகும். இதிலும் ஒருவர் மற்றவரை ஏமாற்றுகிறார். சில மக்கள் ஜமாஅத் பணிகளை மிகவும் அழகிய முறையில் செய்து முடிக்கின்றனர். ஆனால் வீட்டின் உரிமைகளைச் செலுத்துவதில்லை. இதுவும் உடன்படிக்கையிலிருந்து முகம் திருப்புவதாகும். அல்லது அதனை கடைபிடிப்பதிலிருந்து முகம் திருப்புவதாகும். அல்லாஹ்வின் பார்வையில் அவர் தண்டனைக்குரியவர் ஆவார். அல்லாஹ், *ஒவ்வொரு உடன்படிக்கையையும் குறித்து ஒருநாள் விசாரிக்கப்படும் (17:35)* என்று கூறுகின்றான். அல்லாஹ் நல்ல மனிதரின், சரியான மூஃமினின் அடையாளமாக, *அவர்கள் உடன்படிக்கை செய்தால் அதனை நிறைவேற்றுவார்கள் (2:178)* எனக் கூறியுள்ளான்.

எனவே ஒவ்வொரு அஹ்மதியும் நல்ல பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றால், ஒவ்வொரு மட்டத்திலும் தன்னையும் ஆராய வேண்டும். எந்த அளவு சுயமாக உடன்படிக்கையை நிறைவேற்றுபவராக நாம் இருக்கின்றோம் என்பதைப் பார்க்க வேண்டும். எந்த அளவு தன்னிடம் உள்ள அமானத்துகளை ஒப்படைக்கக்கூடியவராக நாம் இருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும்.

அடுத்து அல்லாஹ் ஓர் அழகிய சமூகத்திற்கு ஒருவர் மற்றவருடைய உணர்வுளைக் கவனத்தில் கொள்ள வேண்டும் எனக் கூறுகின்றான். *நீங்கள் உங்கள் மக்களையே பழித்துரைக்காதீர்கள். ஒருவரையொருவர் பட்டப்பெயர் சூட்டி அழைக்காதீர்கள்.*

தல்மிஸ் என்பதற்கு பழித்துரைப்பது மட்டும் பொருள் கிடையாது. இதற்கு பல பொருள்கள் உள்ளன. சில பொறுப்பாளர்களால் தமது உணர்வுகளை அடக்கிக் கொள்ள முடிவதில்லை என்பதைப் பார்க்கின்றோம். சில சமயங்களில் பணிகளுக்காக வரக்கூடியவர்களிடம் அல்லது தனது நண்பர்களிடம் அவர்களது உணர்வுகளை காயப்படுத்தக் கூடிய விசயங்கள் கூறுகின்றனர். இதனால் சில சமயங்கள் பலவீனமான உள்ளங்களைக் கொண்டவர்கள் பொறுப்பாளர்களுக்கு எதிராக ஆவது மட்டுமல்லாமல் ஜமாஅத் அமைப்பின் மீதும் ஆர்வமற்று விடுகின்றனர்.

அல்லாஹ் லா தல்மிஸ் என்று கூறுகின்றான். நான் கூறியது போன்று, இதற்கு பல்வேறு பொருள்கள் உள்ளன. உதாரணமாக, தள்ளுவது, ஒருவரை கட்டாயப்படுத்துவது, அடிப்பது, ஒருவர் மீது குற்றம் சாட்டுவது, தவறாகப் பேசுவது, ஒருவருடைய குறைகளையும், பலவீனங்களையும் தேடுவது, ஒருவரைப் பற்றி தவறான விசயங்களைப் பேசுவது, ஒருவர் விரும்பாத வகையில் பேசுவது ஆகிய இதன் பொருளாகும்.

எனவே, பொறுப்பாளர்கள் இந்த விசயங்களைக் கவனத்தில் கொள்ளவில்லை என்றால், எந்த நபருடன் அவ்வாறு நடக்கப்படுகிறதோ அவரது உள்ளத்தில் அந்த பொறுப்பாளர் மற்றும் ஜமாஅத் அமைப்பிற்கு எதிராக உணர்வுகள் தோன்றாமல் வேறென்ன தோன்றும்?

அவ்வாறே *தனாபஸூ பில் அல்காப் என்று கூறி ஒருவர் விரும்பாத பெயரைக் கொண்டு அவரை அழைக்காதீர்கள். எல்லாருடனும் கண்ணியத்துடனும், மரியாதையுடனும் நடக்க வேண்டும்* என கவனமூட்டப்பட்டுள்ளது. இந்த மாபெரும் சிறப்பம்சங்கள் ஒரு பொறுப்பாளரிடம் தென்பட வேண்டும். இது பொதுவான கட்டளையும் ஆகும். ஒவ்வொரு மூஃமினும் இந்த விசயத்தைக் கடைபிடிக்க வேண்டும். அவருடைய செயல்பாடு சுற்றுப்புறத்தில் அன்பு, பாசம் போன்றவற்றை வெளிப்படுத்துபவையாக இருக்க வேண்டும். மேலும் குறிப்பாக பொறுப்பாளர்கள் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

அடுத்து பொறுப்பாளர்களிடம் இருக்க வேண்டிய சிறப்பம்சமாவது ஜமாஅத் செல்வங்களைக் குறிப்பாக மிகவும் கவனத்துடன் செலவு செய்ய வேண்டும். எந்த விதத்திலும் வீண் விரையம் ஆகக்கூடாது. எனவே குறிப்பாக எந்தத் துறையில் செலவுகள் அதிகமாக இருக்குமோ அவர்களுடைய பட்ஜெட் பெரிதானதாக இருக்கும். அவர்கள் தனது பட்ஜெட்டை மட்டும் பார்க்கக் கூடாது. மாறாக குறைந்த செலவில் அதிக அளவு எவ்வாறு பயனடைய முடியும் என்பதைப் பார்க்க வேண்டும். உதாரணமாக, விருந்தினர் உபசரிப்புப் பிரிவு

உள்ளது. லங்கர் கானா உடைய பிரிவு உள்ளது. ஜல்ஸா ஸாலானா உடைய துறை உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய லங்கர் தற்போது ஏறக்குறைய உலகின் எல்லாப் பகுதியிலும் பரவி விட்டது. ஜல்ஸா ஸாலானாவின் அமைப்பு உலகில் பரவி விட்டது. இந்த இரண்டு துறையைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களும் அதிக கவனத்துடன் இருப்பது அவசியமாகும். பட்ஜெட்டில் வாய்ப்பிருந்தாலும் ஆராய்ந்து, குறைந்த அளவே செலவு செய்ய வேண்டும். இதுவே ஒப்படைக்கப்பட்ட அமானத்துகளின் உரிமையைச் செலுத்தும் வழிமுறையாகும். இதுவே அமானத்துகளின் உரிமையைச் செலுத்தும் சரியான வழியாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு செல்வங்கள் வருவதைப் பற்றிய கவலை இருந்ததில்லை. மாறாக சரியாக செலவு செய்பவர்களைப் பற்றிய கவலையே இருந்தது. எனவே அமீர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்கள் இவற்றின் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்துங்கள்.

அடுத்து ஒரு பொறுப்பாளரிடம் இருக்க வேண்டிய சிறப்பம்சம். இது ஒவ்வொரு மூஃமினின் அடையாளமாகும். ஆனால் எவர் மீது ஜமாஅத் பொறுப்புகள் சுமத்தப்படுகின்றதோ அனைத்தையும் விட அவருடைய முதல் வேலை வீணானவற்றிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும் என்பதாகும்.

அல்லாஹ், *வீணானவற்றிலிருந்து விலகியிருப்பவர்களே மூஃமின்கள் ஆவர்* என்று கூறுகிறான். மூஃமின்களில் சிறந்தவர்களாக இருக்கின்றவர்களின் தரம் மிகவும் உயர்வானதாக இருக்க வேண்டும். அவர்கள் அனைத்து விதமான வீணானவற்றிலிருந்தும் தன்னைப் பாதுகாக்க வேண்டும். வீண் பேச்சுகள், கேலி, கிண்டல் செய்யக்கூடிய கூட்டங்கள், இவற்றில் பொறுப்பாளர்களும் அமர்ந்து, மற்றவர்களை கேலி கிண்டல் செய்து பேசிக் கொண்டிருப்பார்கள். இதிலிருந்து தவிர்ந்து இருக்க வேண்டும். மார்க்க வழிமுறைகள் பின்பற்றப்படாத இப்படிப்பட்ட கூட்டங்களில் பொறுப்பாளர்கள் கலந்து கொள்ளக் கூடாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இதற்கு (அதாவது இந்த வசனத்திற்கு) என்ன பொருள் என்றால், வீணான தொடர்புகளிலிருந்து தன்னை தனிமைப்படுத்தக் கூடியவர்களே மூஃமின்கள் ஆவார்கள். வீணான தொடர்புகளிலிருந்து தன்னை தடுப்பது இறைவனுடன் தொடர்பு கொள்வதற்கு காரணமாக அமையும். எனவே வீணான விசயங்களிலிருந்து உள்ளத்தை தடுப்பது இறைவனுடன் உள்ளத்தை ஒட்ட வைப்பதாகும். இறைவனுடன் தொடர்பு உறுதியாகும் போது தக்வாவின் தரமும் உயரும்.

பிறகு அல்லாஹ் கூறுகின்றான்: கஞ்சத்தனம் எவ்வளவு மோசமானதென்றால் எந்தவொரு மூஃமினுக்கும் அது அழகல்ல. பொறுப்பாளர்கள் வீண் விரயத்திலிருந்து விலக வேண்டும். நடுநிலையைப் பின்பற்றுங்கள். ஆனால் இதற்கு கஞ்சனாகவும் கருமியாகவும் ஆகி விடுங்கள் என்பது பொருளல்ல. எங்கு அத்தியாவசிய தேவைகள் உள்ளனவோ அங்கு செலவு செய்ய வேண்டும். ஒருவருக்கு திறந்த மனப்பான்மையுடன் செலவு செய்வதும், மற்றவருக்கு குறுகிய மனப்பான்மையுடன் செலவு செய்வதும் கூடாது.

பொறுப்பாளர்களுக்குரிய சிறப்பம்சங்களில் ஒன்று கோபத்தை அடக்குவதும் ஆகும். கோபத்தை அடக்க வேண்டும் (3:135) என அல்லாஹ் குறிப்பாக கட்டளையிட்டுள்ளான். சில சமயங்களில் கோபம் வந்து விடும். ஆனால் கோபத்தை அடக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். ஜமாஅத்தின் நலன் தென்படக்கூடிய இடங்களில் சீர்திருத்தத்தின் அடிப்படையில் கோபம் கொள்ள வேண்டியது அவசியமாகும். ஆனால் சின்னச்சின்ன விசயங்களில் கோபப்படுவது, தன்னுடன் பணியாற்றும் நபருடைய கண்ணியத்தைக் கவனத்தில் கொள்ளாமல் இருப்பது ஒரு பொறுப்பாளரிடம் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாததாகும். அவ்வாறு இருக்கக் கூடாது. ஒரு சிறந்த பொறுப்பாளர் அல்லாஹ்வின் இந்தக் கட்டளையைக் கண்முன் நிறுத்த வேண்டும். மக்களை மென்மையாகவும், மிருதுவாகவும், மகிழ்ச்சியுடனும் சந்தியுங்கள் (2:84) என்று அல்லாஹ் கூறுகின்றான். இவ்வாறு நடந்தால் பொறுப்பாளர்கள் தொடர்பாக சில இடங்களிலிருந்து வரக்கூடிய புகார்கள் முடிந்து விடும்.

பிறகு ஒரு பொறுப்பாளரிடம் இந்த சிறப்பம்சமும் இருக்க வேண்டும். அதாவது அவர் தன்னுடன் பணியாற்றும் நபருடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். ஜமாஅத்தின் பொறுப்பு உலகப் பதவி கிடையாது. மேலதிகாரியாகவும் அவருக்கு கீழ் பணிபுரிவதுமாக இருப்பதற்கு ஜமாஅத்திற்கு தொண்டாற்றக்கூடிய ஒவ்வொருவரும் அவர் கீழே பணிபுரிபவராக இருந்தாலும் சரி, அவர் ஓர் உணர்வுடன் பணியாற்றுகின்றார். எனவே மேலதிகாரிகள், பொறுப்பாளர்கள் தமக்கு கீழே பணிபுரியக் கூடிய நபருடன் நல்ல முறையில் நடக்க வேண்டும். தவறு ஏற்பட்டால் அன்புடன் புரிய வையுங்கள். உலக மேலதிகாரிகளைப் போன்று கண்டித்து கொள்ளாதீர்கள். ஒருவர் தவற்றை திருத்தாமல் மிகவும் அதிகமாக அடம்பிடிக்கிறார். அதனால் ஜமாஅத்தின் நலனுக்கு பங்கம் ஏற்படுகிறது என்றால் அவரை சரியான முறையில் எச்சரியுங்கள். அவர் அதிலிருந்து விலகவில்லை என்றால் பிறகு அவரிடமிருந்து எந்த வேலையும் வாங்காதீர்கள். மேலதிகாரிக்கு தெரிவியுங்கள். அவரை வேலையிலிருந்து நீக்குங்கள். மேலும் அலுவலகங்களில் பணிபுரியக் கூடிய இடங்களில் குழுக்களாக பிரியக்கூடிய நிலை ஏற்படக் கூடாது. பொறுப்பாளர்களிடம் தென்பட வேண்டிய உயர் நல்லொழுக்கப் பண்புகளால் விருந்தினர்களுக்கு கண்ணியம் அளிக்கும் பண்பு இருக்க வேண்டும். இதுவும் ஓர் உயர் நல்லொழுக்கம் ஆகும். பொறுப்பாளர்களைச் சந்திக்க அலுவலகத்திற்கு வரக்கூடிய ஒவ்வொரு நபரிடமும் கண்ணியத்துடன் நடந்து கொள்ள வேண்டும். கண்ணியத்துடன் அவரை உட்கார வைக்க வேண்டும். இது மிகவும் முக்கியமான விசயமாகும். அலுவலகத்தில் சந்திப்பதற்காக வருந்திருந்தால் எழுந்து நின்று சந்திக்க வேண்டும்.

இந்த நல்லொழுக்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர் களுக்குயரிதும் ஜமாஅத்தின் நிரந்தர பணியாளர்களுக்கு அவசியமானதும் ஆகும். இதன் மூலம் கண்ணியம் உயரும்; குறையாது.

பிறகு பொறுப்பாளர்களிடம் இருக்க வேண்டிய சிறப்பம்சங்களில் ஒன்று தன்னடக்கமும் பணிவும் ஆகும். இந்த தன்னடக்கத்தை சாதாரண மக்களும் சிறப்பம்சமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். குறிப்பாக பொறுப்பாளர்கள் தமக்குள் தன்னடக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ், பூமியில் ஆணவங் கொண்டு நடக்காதீர் (17:38) என்று கூறுகின்றான்.

சாதாரண மனிதரிடத்தில் ஆணவம் இருப்பது கூட இறைவனுக்கு விருப்பமானதாக இல்லை. பிறகு இறைவனுக்காகத் தொண்டு செய்யக் கூடியவர்களிடத்தில் ஒரு நொடிப்பொழுது கூட ஆணவம் இருப்பது இறைவனுக்கு விருப்பமானதாக இருக்காது.

இந்த சிறப்பம்சங்களை நமது எல்லா பொறுப்பாளர்களும் அதிக அளவு பேண வேண்டும். சந்திக்க வரக்கூடிய ஒவ்வொருவரிடமும் தன்னடக்கத்துடன் சந்திக்க வேண்டும்.

பிறகு தீர்ப்பு வழங்கக்கூடிய பணியைக் கொண்ட பொறுப்பாளர்கள், மக்கள் மத்தியில் சமாதானத்தை ஏற்படுத்தும் பணியைச் செய்யக் கூடியவர்கள், சீர்திருத்தக் கமிட்டி, கஸா போன்ற அமைப்புகள் அல்லாஹ்வின் இந்த கட்டளையினை நினைவில் கொள்ள வேண்டும்.

நீதியை நிலைநாட்டுங்கள். அது இறையச்சத்திற்கு மிக நெருக்கமானதாகும். (5:9)

எனவே ஒவ்வொரு தீர்ப்பும் நீதியுடன் இருக்க வேண்டும். சில சமயங்களில் என் முன்னால் சில தீர்ப்புகள் வருகின்றன. அந்த வழக்கில் ஆழம் வரை சென்று கவனம் செலுத்தப்படாமல் இருப்பது தெரிகிறது. அதன்படி யாரைப் பற்றி தீர்ப்பு வழங்கப்படுமோ அவர்கள் மத்தியில் நிம்மதியின்மை ஏற்படுகிறது. சரீஅத்துடைய தெளிவான கட்டளையுடன் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால் பிறகு அது தெளிவாக இது சரீஅத்தின் கட்டளையாகும். எனவே இந்த கட்டளையின்படி இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது என எழுதப்பட வேண்டும்.

குறிப்பாக காஸிகள் – தீர்ப்பு வழங்கக் கூடியவர்கள் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் தேவை உடையவர்கள், ஏழைகள் உள்ள பகுதிகளில் அவர்களை கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதும் சிறப்பம்சமாக இருக்கிறது.

நமது வசதிக்கேற்ப அவர்களை கவனிப்பது சம்பந்தப்பட்ட அமீர்கள் மற்றும் பொறுப்பாளர்களின் பணியாகும். இது தொடர்பாக விண்ணப்பங்கள் வர வேண்டும் என்பது கட்டாயமில்லை. தானே இதனை ஆராய்ந்து பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். இது அமீர்கள் மற்றும் தலைவர்களுடைய பொறுப்பாகும்.

ஒவ்வொரு அமீருடைய, ஒவ்வொரு தலைவருடைய, ஒவ்வொரு பொறுப்பாளருடைய மிகப்பெரிய பொறுப்பாகும். நன்மையைப் போதிப்பதும் தீமையிலிருந்து தடுப்பதும் ஆகும். எனவே, நன்மையைப் போதிப்பதையும் தீமையிலிருந்து தடுப்பதையும் ஒவ்வொரு பொறுப்பாளரும் எந்நேரமும் நினைவில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பொறுப்பாளரும் தன்னை ஆராய்ந்தவாறு தனது சொல்லையும் செயலையும் ஒன்றாக்காத வரை தனக்குள் இறையச்சத்தை ஏற்படுத்தாத வரை அல்லாஹ் கவனமூட்டிய இறையச்சத்தின் வழியினைத் தேடாத வரை இது நடைபெறாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறையச்சத்தைப் பற்றி ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

ஒரு சில நன்மைகளைச் செய்வதும், ஒரு சில தீமைகளிலிருந்து தவிர்ந்திருப்பது மட்டும் இறையச்சம் ஆகாது. மாறாக அனைத்து நன்மைகளையும் செய்வதும், சின்னச்சின்ன தீமைகளிலிருந்தும் தவிர்ந்திருப்பதும் இறையச்சம் ஆகும்.

எனவே இந்த தரத்தை அடைந்துதான் நன்மையைப் போதிப்பவர்களாகவும் தீமையிலிருந்து தடுப்பவர்களாகவும் நாம் ஆக முடியும். மேலும் அமானத்துகளுடைய உரிமைகளைச் செலுத்துபவர்களாக நாம் ஆக முடியும். அல்லாஹ் ஜமாஅத் உறுப்பினர்களுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட மேலும் தேர்ந்தெடுக்கப்பட இருக்கின்ற, தேர்ந்தெடுக்கப்பட்டு வரக்கூடிய அனைத்து பொறுப்பாளர்களுக்கும் எனக்கும் அமானத்துகள் மற்றும் உடன்படிக்கைகளின் உரிமைகளைச் செலுத்தக்கூடிய நல்வாய்ப்பினை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH MOSQUE, London.

on **12.04.2013**

Translated by : Maulavi N. ZIYAUL HAQ

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456